113

IYA KATHAI KOTHU

BOOK I—STANDARD IV

I. NATESANAR

113

17 JAN 194



THE
MADRAS PREMIER CO.
EDUCATIONAL PUBLISHERS
MADRAS

இனிய கதைக் கொத்து

முதற் புத்தகம்

(4-ஆம் வகுப்பு)

17 JAN 1945
MADRAS

★

புலவ-வித்வான் ஐ. நடேசனர்

894.8113

★

மதராஸ் பிரிமியர் கம்பெனி,

பதிப்பாளர்

11, ராதாகிருஷ்ணன் தெரு, தியாகராயநகர்,

மதராஸ்.

பதிப்புரிமை] 1944 [விலை அணு 3

031,3

Printed at the
P. M. SAWMY PRESS,
56, Tirupalli Street, G. T., Madras.

முகவுரை.

இளம் பருவ மாணவரறிவு தெளிவதற்குத் துணைசெய்வது கதையே. வீரம், அன்பு, உண்மை, ஒழுக்கம், கல்வி, நுண்ணறிவு முதலியன மிளிரும் வகையில் கதை அமைந்தால் பெரும் பயனேற்படும். மாணவரின் வாழ்க்கை யடிப்படையே பள்ளிப்பழக்கமும் கல்வியும். ஆதலால், அதைச் செம்மையுற அமைப்பதே நம் கடமை. அப்பெரு நோக்கத்தைக் கொண்டே இக்கதைகள் எழுதப்பட்டன.

கதைகள் பலவற்றை (சொல்லுதல் என்னும்) ஒரே முறையில் கற்பிப்பதைவிட்டு, கதாநாயகன் தானே கூறுதல், கவிதையுருவில் சொல்லுதல், நாடகமாகக் கற்பித்தல், கண்ணெதிரில் நடப்பது போல அங்கங்கே படங்களை அமைத்துக் காட்டுதல் முதலிய பல முறைகளை இக்கதைப் புத்தகத்தில் கையாண்டிருப்பது ஒருதனிச் சிறப்பாகும்.

எல்லாக் கதைகளும் எளிய, இனிய நடையில் சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல் என்னும் அழகுகளமைய எழுதப்பட்டுள்ளன.

இக்கதைகளை மாணவர்க்குப் பயன்படுத்தி என்னையூக்குவார்க்கு யான் பெரிதும் கடப்பாடுடையேன்.

அன்பன்,
ஐ. ந.

உள்ளடக்கம்.

எண்	பொருள்	பக்கம்
1.	இளமையிற் கல் (சொல்லல்)	1
2.	வேளாண்மையின் மேன்மை (தான் கூறுதல்)	4
3.	வீரத்தின் மேன்மை (கவிதை)	7
4.	மதிநுட்பம் (நாடகம்)	10
5.	சிறு துறும்பும் பல்குத்த வுதவும் (சொல்லல்)	15
6.	அழகால் விளைந்த ஆபத்து (தான் கூறுதல்)	19
7.	சோம்பலும் குறும்பும் துயர்பல விளைக்கும் (கவிதை)	22
8.	நம்பிக்கைத் துரோகம் செய்த நரி (சொல்லல்)	24
9.	சோம்பலுள்ள வண்டிக்காரன் (நாடகம்)	27
10.	மூடி மறைத்தாலும் முட்டாள் வெளியாவான் (சொல்லல்)	30

இனிய கதைக் கொத்து

(முதற் புத்தகம்)



1. இளமையிற் கல்.

மாணவர்களே! இந்தப் படத்தில் உள்ள இருவரையும் பார்த்தீர்களா? மேலே உட்காந்திருப்பவர் பெயர் ஐயாசாமி. கீழே உட்காந்திருப்பவள் அவருடைய தங்கை. அவள் பெயர் மனோன்மணி. அவர்கள் இருவரும் என்ன செய்கிறார்கள் என்று பாருங்கள்.

ஐயாசாமி கையில் ஒரு புத்தகம் வைத்துக் கொண்டிருக்கிறார். வைத்துக்கொண்டு என்ன செய்கிறார்? ஒரு பாடத்தைப் பார்த்துச்

சொல்லுகிறார். மனோன்மணி அவர் சொல்வதை எழுதுகிறாள்.

பார்த்தீர்களா! இப்படியே மனோன்மணி தினமும் தன் அண்ணனை வேண்டிக்கொண்டு அதிகாலையில் எழுந்து சொல்வதெழுதல், கணக்குப்போடல், முதலியவைகளைச் செய்வாள்; காப்பி எழுதுவாள்; அவளுடைய அண்ணனும் மனோன்மணிக்கு அன்புடன் கல்வி கற்பிப்பார்.



இங்கே பாருங்கள். மனோன்மணியும் ஐயாசாமியும் என்ன செய்கிறார்கள்? மேலே ஒரு "மின் ஒளி" விளக்கு எரிகிறது பாருங்கள். விளக்கு வெளிச்சத்தில் இருவரும் படிக்கிறார்கள். மனோன்மணி பகலில் பள்ளிக்கூடத்தில் கற்ற பாடங்களை இரவில் வீட்டில் படிக்கிறாள்.

அப்போதும் அவள் தன் அண்ணனிடம் ஐயங்களைக் கேட்டு அறிவாள். ஐயாசாமியும் அன்புடன் தன் தங்கைக்குத் தெரியாதவைகளை இரவில் கற்பிப்பது வழக்கம்.

இப்படியே மனோன்மணி தன் அண்ணனிடம் கேட்டுக் கேட்டுப் படித்தாள். இளமையிலேயே மிக முயன்று படித்ததால் கல்வியில் கெட்டிக்காரியானாள். பள்ளிக்கூடத்திலும் அவள் வகுப்பில் முதன்மையாயிருந்தாள்.

இதோ பார்த்தீர்களா! மனோன்மணியுடன் இரு பெண்கள் படிக்கிறார்கள். அவர்கள் இருவரும் மனோன்மணியின் தங்கைகள். இப்போது மனோன்

மணி தன் தங்கைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறாள். தினமும் காலை, மாலை இரு வேளையும் அவள் தன் தங்கைகளுக்குக் கல்வி கற்பிக்கிறாள்.

இப்படியே நீங்களும் இளமையிலேயே முயன்று படித்துப் பின்பு உங்கள் தம்பி, தங்கை முதலியவர்களுக்கும் கற்பித்தால் எவ்வளவு நலமாயிருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

" இளமையிற் கல் "   " ஓதுவது ஒழியேல் "

" ஊக்கமாய்ப் படித்தால் உயர்வடையலாம் "

2. வேளாண்மையின் மேன்மை

குழந்தைகளே, என்னைப் பாருங்கள் ! நான் என்ன செய்கிறேன் ? ஏர் உழுகிறேன். என்னைப் பற்றிய ஒரு கதை சொல்லு கிறேன். அதை நீங்கள் கேளுங்கள்.



நான் சிறுவனாக இருக்கும்போது இந்த நிலம் மேடு பள்ளமாகக் கிடந்தது. எங்கிலும் முள் மூடிக்கிடந்தது. பின்பு, நான் தினமும் கொஞ்சங் கொஞ்சமாக முள்ளைப் போக்கினேன் ; அப்படியே நாளடைவில் சமப்படுத்தி, நல்ல நில மாக்கிவிட்டேன்.

அப்போது எனக்கு மாடுகள் இல்லை. நானே மண்வெட்டியால் கொத்திச் சில காய் கறிகளைப் பயிரிட்டேன். அவைகளை விற்று ஒரே ஆண்டில் நூறு ரூபாய்ச் சேர்த்தேன் ; இந்த மாடுகளை வாங் கினேன். ஒரு கிணறும் வெட்டினேன. இப்போது இந்த நிலத்தில் நெல் பயிரிடுகிறேன். பெரும்பா லும் என் வேலைகளை நானே செய்கிறேன்.

பார்த்தீர்களா ! என் வயலில் அறுத்த நெற்கட்டு களை நானே அடிக்கிறேன். இப்படியே அடித்து தானியங் களை மொத்தமாக்குவேன் ;

பின்பு தூற்றுவேன்; மூட்டைகளாகக் கட்டு வேன்; ஒவ்வொன்ருக தூக்கிச்சென்று வீட்டில் சேர்ப்பேன்.

என் மனைவியும் மகளும் நெல்லைக் குத்து வார்கள். நாங்கள் மிஷினில நெல் குத்துவது இல்லவே இல்லை. என் தெரியுமா! மிஷினில் குத்தப்படும் அரிசி யில் உயிரணுக்கள் கெட்டு

விடும். அந்த அரிசியை சாப்பிட்டால் உடம் புக்குக் கொஞ்சமும் நன்மை ஏற்படாது. ஆகை யால்தான், நாங்கள் கையினுலேயே நெல்லைக் குத்திக் கொள்ளுகிறோம். இந்த அரிசி எங்கள் உடலைப் பலப்படுத்துகிறது. அதனுல் எங்களுக்கு நோய் வருவதே இல்லை. "நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம்" அல்லவா?

நான் வயலில் வேலை செய்யச் சென்ருல் என் மனைவி வீட்டிலிருந்து சமைப்பாள். வேளை வேளைக்கு நல்ல உணவுகளை அவள் சமையல் செய்வாள். என்



வேலையைவிட்டு நான் வருவதற்குள் எனக்கு வீட்டில் உணவு தயாராய் இருக்கும். நான் என் உடைகளை வெளுத்துக் கொண்டு, குளித்து வீட்டுக்கு வருவேன்.

வந்தவுடன், என் மனைவி எனக்கு உணவிடுவாள். நான் கவலையின்றி விருப்பத்தோடு, பொறுமையாக உண்பேன். உண்டவுடன் சிறிது நேரம் ஓய்வுடனிருப்பேன்.

இப்படியே உடல் வருந்த உழைத்து, உழைப்புக்கேற்ற ஊதியம் பெற்று, வயிருற உண்டு நான் வாழ்க்கையை நடத்துகிறேன். நான் சிறுவயதில் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது "மேழிச் செல்வம் கோழைபடாது" எனப்படித்தேன். அந்த உண்மையை இப்போது முற்றும் அறிந்தேன். என்னைப் போலவே நீங்களும் "பூமி திருத்தியுண்ண" விருப்பி நன்கு உழைத்தால் பெருவாழ்வு பெறுவீர்கள்.

"ஓதுவான் எல்லாம் உழுவான் தலைக்கடை"

3. வீரத்தின் மேன்மை

கவிதை



[வில்லியம் டேல்]

அந்தம் மிக்க ஐரோப் பாவின்
நந்த வனமெனும் சுவிட்சர் லாந்தில்
வில்லியம் டேல்எனும் வீர இடையன்
வில்வித் தையில் வேறு இணை இல்லான்
அவனுக்கு ஓர்மகன்; ஐயிரண்டு வயதும்
எவரையும் வெல்லும் இயல்பும் உடையவன்

[தலைவன்]

இவர்கள் வாழும் எழில்வனத்தை அடுத்து
நவமாம் ஆல்டார்ப் நகரம் இருந்தது
அந்நகர்த் தலைவன் அதிகமும் கர்வி
செந்நெறி யறியாச் சினத்தன் பாவி

[டேல் மகனுடன் நகர் செல்லுதல்]

ஒருநாள் டெல்சில உணவுப் பொருள்வாங்க
திருமக ஞேடும் சென்ருன் நகர்க்கு

[தலைவன் கொடுஞ் செயல்]

அங்கொரு தெருவில் அமைத்தான் கம்பம்
தங்கவே தொப்பியைத் தானும் மாட்டினன்
போவார் வருவார் போற்றி வணங்க
ஏவினன் பலரும் இணங்கி வணங்கினர்

[டேல் வீரம்]

அதனைக் கண்டான் ஆண்மைசூர் வில்லியம்டெல்
"இதனைப் பணியேன் இறைவனைப் பணிவேன்"
என்று கூறி ஏகினன் இச்செய்தி
சென்று பலரும் செப்பினர் தலைவனுக்கு

[தலைவன் கோபம்]

அறிந்த தலைவன் அவனை யிழுத்துக்
குறித்த விடத்தில் கொணர்மின் என்ருன்
அப்படி டெல்லை அங்கே கொணர்ந்தார்
"மலைநாட்டு இடையா, மதியாமல் என்னை
சிலைசேர் கல்வியின் செருக்கால் சென்ருய்
அடக்குவேன் உன்னை ஆசட்டும் பயலே"

[தலைவன் உத்தரவு]

என்றுபின் கூறுவான் "இவன்றன் மகனை
நின்றிடச் செய்து நெடுந்தலையில் ஆப்பிளொன்று
வையுங்கள் டெல்அதை விரைவில் அம்பால்
எய்திரு கூருய் ஈர்ந்திட வேண்டும்
இல்லையேல் இருவரும் எமனுல கடைவர்
வல்லவன் என்ற வகையறி வே"னென்ருன்

[சிறுவன் சிறப்பு]

கொடியவன் மொழியால் குலைந்தது டெல்மனம்
குடிக்கொரு மைந்தன் கொலப்படு வானெனக்
கொண்டனன் மனதில் குனிந்து நின்றனன்
கண்ட அச்சிறுவன் கல்லென்று சிரித்து
"தந்தையீர் மனத்தில் தயங்குதல் வேண்டா
நுந்தம் விற்குறி நுவலல் வேண்டுமோ"
என்றசை யாமல் இருந்தனன் சிறுவன்
நன்றெனத் தந்தை நற்குறி பார்த்து
தூணியி லிருந்து தூயவம் பிரண்டை
மாணுற வெடுத்தொன்று மடியிற் செருகி
ஒன்றினை யெய்தான் உடனே ஆப்பிள்
நன்றுற விரண்டாய் நடுவே பிளந்தது

[தலைவன் கேள்வி]

கண்டனன் கொடியோன் களித்தனன் பின்னும்
மண்டிய வீரனை "மற்றோ ரம்பு
எடுத்த தேதுக்கென்று இயம்புக" வென்றான்
அடுத்ததற் குப்பதில் அறைந்தனன் வில்லியம்

[வில்லியம் டேல் பதில்]

"தொடுத்த தோரம்பு தோற்றதுண் டாயின்
அடுத்த அம்புன் ஆவியைப் போக்க
எடுத்தனன் கொடியோய் இதன்பொருட்" டென்று
துடித் துரையாடித் தூயதன் மகனொடு
வில்லியம் டெல்மிக விரைவில் நடந்தனன்.

[நீதி]

இதனால் அறியும் எழில்நீதி யாதெனில்
எதனினும் மிக்கது எழில்மன வலியாம்
உடல்வலி யதனொடு உற்றிடும் தீமை

தொட வணுகாது தொலையா இன்பம்
பெற் றினி தாகப் பாரில்
வெற்றிசேர் புகழொடு விளங்கலாம் உண்மை.

---

4. மதிநுட்பம்

[நாடகம்]

காட்சி 1.

இடம் :—காடு

காலம் :—நண்பகல்

உறுப்பினர் :—ஔவை, பையன்.

ஔவை :—[வழி நடந்த அலுப்பாலும் பசியின் களைப்பாலும் மெல்ல நடந்துகொண்டே] உஸ்; அப்பா! ஒரு அடியும் எடுத்து வைக்க முடியவில்லையே! குடிக்க நீரும் கிடைக்காதுபோ லிருக்கிறது!

நிழலையும் காணேன் கடவுளே! என்ன செய்வேன் [நிமிர்ந்து பார்க்கிறார்.]

பையன் :—[ஔவையாரை நோக்கி ஓடிவருகிறான்] பாட்டி, நீங்கள் யார்? எந்தவூர்?

ஔ :—நானா! என்னை ஔவை என்பார்கள். எனக்கு எவ்வூரும் ஊர்.

பை .—எங்கே போகிறீர்கள்?

ஔ :—அப்பா, என்னால் பேச முடியவில்லை.

பை :—ஐயோ! பாவம்! மிகுந்த வெய்யிலில், நடந்த வருத்தம், பசியோடிருக்கிறீர் களே!

ஔ :—ஆம்.

பை :—பாட்டி, இதோ; இந்தத் தண்ணீரைக் குடியுங்கள் [கொடுக்கிறான்.]

ஔ :—[தண்ணீரைக் குடித்துவிட்டு பையனைப் பார்த்து] குழந்தாய் அண்மையில் நிழல் உண்டா?

பை :—ஓ! உண்டே! அதோ [சுட்டிக் காட்டு கிறான்] பாருங்கள். அது ஒரு நாவல் மரம். இது ஆடி மாதமல்லவா!

ஔ :—ஆம்; ஆம். பழங்கூட இருக்குமே!

பை :—அதைத்தான் சொல்லுகிறேன். அங்கே செல்லுங்கள். நான் போகிறேன்.

ஔ :—சரி ; நான் போய் வருகிறேன், இந்த வேளையில் எனக்கு நீர் உதவிய நீ நல்ல வாழ்வடைவாய். [போகிறார்கள்.]

காட்சி 2.

இடம் :—காட்டையடுத்த சோலை.

காலம் :—நண்பகல்.

உறுப்பினர் :—ஔவை, (முருகன்) சிறுவன்.

ஔ :—[போய்க் கொண்டிருக்கிறார்]

முருகன் :—[ஒரு மாட்டுக்கார பையன்போல் வந்து] பாட்டி, எங்கே போகிறீர்கள் ?

ஔ :—அப்பா இந்த நாவல் மரத்தைத்தான் நாடி வருகிறேன்.

முரு :—எதற்காக ?

ஔ :—எனக்கு மிகுந்த பசியாயிருக்கிறது.

முரு :—ஓ, பழம் வேண்டுமா ?

ஔ :—ஆம் அப்பா. அதற்காகத்தான் வந்தேன்.

முரு :—சரி, இருங்கள். நான் மரத்தின் மீதில் ஏறிப் பறித்துப் போடுகிறேன்.

[ஏறுகிருன்.]

ஔ :—அப்பா கிளைகளை உறுதியாகப் பற்றி ஏறு.

பை.—சரி; பாட்டி உங்களுக்கு சுடும் பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா ?

ஔ :—ஐயோ, நீ அறியாதவன். நாவற்பழத்தில் சுடும் பழம், சுடாத பழம் என இருவகை யுண்டோ ! [சிரிக்கிருர்.]

பை :—பாட்டி, நான் அறியாதவன் என்று கேலி செய்து சிரிக்கிறீர்களா? இதோ பாருங்கள் [ஒரு கிளையைப்பிடித்து அசைக்கிருன் ; பழங்கள் கீழே விழுந்து சிதறவே அவற்றில் மண் ஒட்டிக்கொண்டதனுல்]

ஔ :—[ஒரு பழத்தை எடுத்து மண்போக ஊதுகிருர்.]

முரு :—பாட்டி, பழத்தை ஏன் ஊதுகிறீர்கள் ? சுடுகிறது என்றுதானே! இப்போது சுடாத பழம் போடுகிறேன். துணியைப் பிடியுங்கள்.

ஔ :—[துணியைப் பிடித்து] அப்பா போடு.

பை :—[சிரித்துக் கொண்டே போடுகிருன்]

ஔ :—[கீழே உட்கார்ந்து பழம் சாப்பிடுகிருர்.]

பை :—[இறங்கிவந்து] பாட்டி நான் போய் வருகிறேன்.

ஔ :—தம்பி, நான் இதுவரையில் படிப்பில் எவரும் எனக்குச் சமம் இல்லே என்றிருந்தேன். இப்போது உன் மதி நுட்பத்திற்கு என் கல்வி தோற்றுவிட்டது. நீ போய்வா.

பை .—பாட்டி, தங்களிடம் ஒரு பொருள் கேட்டுத் தெரிய விரும்புகிறேன்.

ஔ :—அப்படியா ! என்ன அது ?

பை :—பாட்டி, உலகில் அரியது எது என்பதைக் கூறுங்கள்.

ஔ :—கூறுகிறேன் :—

"அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிது அரிது மானிடராதல் அரிது
மானிட ராயினும் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது
பேடு நீங்கிப் பிறந்த காலேயும்
ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலேயும்
தானமும் தவமும் தாம்செயல் அரிது
தானமும் தவமும் தாம்செய்வா ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே."

பை :—பாட்டி, நான் போய் வருகிறேன்.

ஔ .—போய்வா. [இருவரும் போகிறார்கள்.]

---

5. சிறு துரும்பும் பல் குத்த வுதவும்

சிறுவர்களே, இந்தப் படத்தில் ஒரு தாயை யும் குழந்தையையும் பார்க்கிறோம். ஒரு நாள் தாய் தன் குழந்தையோடு கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்தாள். அப்போது தாய் தன் குழந்தையைப் பார்த்து, "என் கண்ணே, செல்வமே, தங்கமே, கட்டிக் கரும்பே, கனி ரசமே" என்றெல்லாம் பாராட்டினாள். அதனால், குழந்தை தன்னை மிகப் பெருமையாக நினைத்துக் கொண்டது.

சிறிது நேரத்தில் குழந்தையைத் தனியே விட்டுவிட்டுத் தாய் உள்ளே சென்றாள். அப் போது அந்தக் குழந்தை இருக்குமிடத்தில் ஒரு குருவி வந்தது. குழந்தை அந்தக்

குருவியைப் பார்த்து "ஓ! குருவியே, நீ மிகவும் சிறிய பறவை. உனக்கு என்னைப் போல பெருமை யுண்டா?" என்றது. உடனே குருவி "குழந்தாய் நீ அப்படி நினைக்கிறாயா? எங்கள் இனத்தாரால் மக்



களுக்கு மிக நன்மை யுண்டு. சொல்லுகிறேன் கேள். மக்கள் இடும் பயிரை அழிக்கும் கொடிய பூச்சிகளை நாங்கள் தின்கிறோம். ஆகையால், பயிர்கள் அழிவின்றி செழித்து நல்ல பலனைத் தருகின்றன" என்றது.

கொஞ்ச நேரத்தில் குழந்தையினிடம் ஒரு கோழி வந்தது. அப்போதும் அக்குழந்தை கோழியைப் பார்த்து "ஏ! கோழி நான் மிகவும் சிறப்புடையவன், நீ எனக்குக் கொஞ்சமும் ஈடாக மாட்டாய். ஆதலால், நீ என் அருகில் வராதே என்றது. அப்போது கோழி "பையா, நான் உன் அருகில் வரலாகாதா! நான் இல்லாவிட்டால் உங்கள் வீட்டுப் பக்கத்தில் உள்ள அழுக்கும், அழுகிய பொருள்களும் எப்படி

நீங்கும்? நானல்லவா அவைகளை உட்கொண்டு உங்களிடத்தைச் சுத்தப்படுத்துகிறேன்'' என்று கூறிவிட்டு ஓடியது.

அதற்குப் பின்பு அந்த விடத்தில் சில எறும்புகள் வந்தன. பையன் அவைகளைப் பார்த்து ''எறும்புகளே, நீங்கள்

மிகவும் சிறியவர்கள். எங்களுடைய கை, கால் பட்டாலும் இறப்பீர்கள். இதோ என்னைப் பாருங்கள். நான் எவ்வளவு அழகாய் இருக்கிறேன்'' என்றான்.

அதைக் கேட்ட எறும்புகள் ''சிறுவனே, நீ ஆடை, அணிகளால் அழகுபடுத்திக்கொண்டாய். ஆனால், உன்னிடம் சுறுசுறுப்பே கிடையாது. நீ எந்த வேலைக்கும் மற்றவர்கள் கையை எதிர்பார்க்கிறாய். நாங்கள் மிகவும் சுறுசுறுப்புள்ளவர்கள். மேலும், எங்கள் வேலைக்கு யாருடைய உதவியையும் எதிர்பார்க்க மாட்டோம்'' என்று சொல்லி ஓடிவிட்டன.

ஆனாலும் பையன் தன் பெருமையையே எண்ணி எண்ணி மகிழ்ந்திருந்தான். கடைசியாக ஒரு கிளி வந்தது. பையன் அதைப் பார்த்து

கிளியே, நீ, எந்தவகையில் எனக்கு இணையாவாய்? பறவை இனத்தைச் சேர்ந்த நீ என் எதிரிலும் வரலாமா? என்றான். உடனே கிளி, "அடா! சிறுவனே, என்னை நன்றாகப் பார். என் உடல் பச்சைப் பசேல் என்றும், மூக்கு செக்கச் செவேல் என்றும் அழகாய் இருக்கின்றன. நான் நல்ல கனிகளையே உண்கிறேன். நினைத்த விடத்திற்கெல்லாம் தங்குதடையின்றிப் போவேன். இன்னும் மனிதரைப் போலவும் பேசுவேன். ஆகையால், உன்னைவிட எனக்கே மிகவும் சிறப்பு" என்றது.

இதைக் கேட்ட பிறகுதான் குழந்தைக்கு நல்லபுத்தி வந்தது. உலகில் உள்ள எல்லாம் ஒவ்வொரு வகையில் சிறந்தவைகளே. அவைகளால் மனிதர்களுக்கு மிகவும் பயனுண்டு. ஆதலால், எதையும் நாம் இகழலாகாது என்று அவன் உணர்ந்தான்.

"சிறு துரும்பும் பல் குத்த வுதவும்"

"எப்பொருளையும் இகழலாகாது"

"அறுகம்புல்லும் ஆபத்தில் உதவும்"



6. அழகால் விளையும் ஆபத்து

[கிளி தன் குஞ்சுக்குக் கூறுகிறது.]

என் அருமைக் குழந்தாய், நீ ஏன் கூட்டை விட்டு வெளியே வந்தாய்? இப்படி வரலாமா? நீ மிகவும் சிறிய குழந்தை; ஆகையால் "சிறு பிள்ளை பயமறியாது" என்றபடி நினைத்தபோதெல்லாம் வெளியே வந்து உலவுகிறாய். இப்படி வந்தால் உனக்குத் துன்பம் விளையும்.

நானும் உன்னைப் போல சிறிய குழந்தையாயிருக்கும்போது வெளியே வருவதுண்டு. வழக்கம்போல் ஒரு நாள் காலையில் என் தாய் இல்லாதபோது கூட்டிலிருந்து வெளிப்பட்டேன்; பின்பு கீழே இறங்க ஆசைப்பட்டேன். அப்படியே இறங்கினேன்.

நான் கீழே இறங்கினேனோ இல்லையோ ஒரு காக்கை என்னருகில் வந்தது. நம்மைப் போல் ஒரு பறவைதானே என்று நான் சும்மா இருந்தேன். ஆனால், காக்கை என்னைக் கொத்துவதற்கு வேகமாய் வந்தது.

நான் என்ன செய்வேன்? பக்கத்திலிருந்த ஒரு கல்லின் சந்தில் பதுங்கிக் கொண்டேன். அந்தச் சந்தில் காக்கை நுழைய முடியாது. ஆகையால், அது போய்விட்டது.

சிறிது நேரம் பொறுத்து நான் வெளியே வந்தேன். எப்படியாவது தப்பித்துக் கொண்டு கூட்டுக்குப்போக நினைத்தேன். மெதுவாகப் போய்க் கொண்டிருந்தேன். என்னை ஒரு பூனை பார்த்தது. என்மேல் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தது. நான் பறக்கத் தொடங்கினேன். முடியாமல் ஒரு கிணற்றின் படியில் விழுந்தேன். பூனையும் கிணற்று நீரில் விழுந்தது.

அப்போது பூனை மியா, மியா, எனக் கத்தத் தொடங்கியது. உடனே சில மனிதர்கள் அங்கே வந்தார்கள். எங்கள் இருவரையும் கண்டார்கள். பூனையைத் தண்ணீரிலிருந்து எடுத்து கரையில் விட்டார்கள். என்னையும் பற்றினார்கள். ஆனால், என்னை மாத்திரம்

விடவில்லை. அழகான ஒரு கூடு செய்து அதில் என்னை வைத்தார்கள்.

அந்த வீட்டில் உள்ள எல்லோரும் அடிக்கடி என்னிடம் வருவார்கள். "கிளியே, பச்சைக் கிளியே" என்று அருமையாக அழைப்பார்கள். "ஆ! என்ன அழகு, மூக்கின் சிவப்பு பவளம் போல இருக்கிறதே. கால்களும் சிவப்பு; கண்களும் சிவப்பு; கழுத்தைச் சுற்றிச் சிவந்த கோடு. பார்க்கப் பார்க்க ஆசையாயிருக்கிறது" என்பார்கள். அவர்கள் என்னை எவ்வளவு புகழ்ந்தும் எனக்கு வெறுப்பாகவே இருந்தது.

இன்னும் பால், பழம், சோறு, பருப்புகள் கொண்டுவந்து என் அலகின் அருகில் காட்டு வார்கள் அப்போது எனக்குத் தொந்தரவாகவே இருந்தது.

இப்படிச் சில நாள் நான் வருந்திக் கொண்டிருந்தேன். ஒரு நாள் ஒரு சிறுமி எனக்குப் பால் வைக்கக் கூட்டைத் திறந்தாள். நான் அவள் கையைக் கடித்தேன். பாவம்! அவள் "ஓ!" என்று கூவி அழுதாள். நான் விரைவாகக் கூட்டைவிட்டு வெளிப்பட்டுப் பறந்து வந்து விட்டேன்.

அப்படிச் செய்திராவிட்டால் நான் கூட்டிலேயே அடைபட்டுத்தான் இருக்கவேண்டும்.

பார்த்தாயா, உனக்கும் இப்படிப்பட்ட ஆபத்து பல வரலாம். ஆகையால், நீ மிகவும் கருத்தோடு இருக்கவேண்டும்.



7. சோம்பலும் குறும்பும் துயர்பல விளைக்கும்.

கவிதை

[சோம்பலின் விளைவு]

இந்தச் சிறுவர் இரண்டு பேரும்
சிந்தையில் படிப்பைச் சிறிதும் விரும்பார்
ஆதி நாள் முதலாய் அநுதினம் சோம்பலாய்
வீதிகள்தோறும் விளையாடித் திரிவார்
பள்ளிக்குச் செல்லாமல் பாழா னூர்கள்
கள்ளமும் குறும்பும் கற்றுத் தேர்ந்தார்கள்.

[கூனன் வருதல்]

ஒரு நாள் குறும்பர் ஓரிட மிருந்தனர்
தெருவழி வருவார் செல்வார் தம்மை
கேலிசெய் திருந்தனர் கிழவன் ஒருவன்
கோலினை ஊன்றிக் கூன்முது கோடு
காலொன்று நொண்டியாய் கையிலோர் பொதியுடன்
சாலவும் வருந்தி, தான்செலக் கண்டனர்.

[குறும்பு]

கோலியால் முதுகின் கூனை யடித்தனர்
கோலைப் பிடுங்கிக் கொண்டனர் பின்னும்
நொண்டி நடந்து "நொண்டி" யென் றிகழ்ந்தனர்
கொண்டனர் கைப்பொதி கூத்துக்கள் பலவும்
காட்டினர் கூனனைக் களிப்பே மிகவும்
நாட்டமாய் இருந்தனர் நடுத்தெரு வின்கண்



[வண்டி வருதல்]

அந்த வேளையில் அவர்களின் பின்னே
வந்தது குதிரையின் வண்டி ஒன்று
அதனை யடுத்து அங்கொரு மோடார்
அதிக வேகமாய் அருகே வந்தது.
இரண்டையும் கண்டு இருவரும் ஒதுங்க.
விரைந்தனர் மெத்த வெருவி ஓடினர்

[கால் முறிந்தது]

இருவரில் ஒருவன் இடறி விழுந்தான்
தெருவில் விழுந்த சிறுவன் கால்மேல்

மோடார் ஏறிட முறிந்ததுகால் இரண்டாய்
ஓடிவந்து பலபேர் உதவிகள் செய்து
வண்டியி லேற்றி வைத்திய சாலைக்குக்
கொண்டு போயினர் குணமாவ தற்கு
ஓராண்டு சென்றும் ஒருகால் நொண்டிப்
பேரே வழங்கப் பெரிதும் வருந்தினன்.

[நீதி]

ஆதலால் நாமும் அவ்விதம் சோம்பல்
தீதினை விளக்கும் தீய குறும்பு
என்பவை இகழ்ந்து சுளிக்கச் சொல்லேல்
என்பதை யறிந்து என்றும் வாழ்வோம்.

---

8. நம்பிக்கைத் துரோகம் செய்த நரி

ஒரு நரி ஒரு ஆற்றின் கரைப் புதரில் வாழ்ந்திருந்தது. அவ்விடத்தில் நஞ்சை நிலங்கள் மிகவுண்டு. நஞ்சை நிலங்களின் வரப் போரங்களில் நண்டுகள் வளை தோண்டிக்கொண்டு வாழும் அல்லவா! நரி அந்த இடத்திலுள்ள நண்டுகளை வேண்டியமட்டும் தின்னும். அதனால், நரி கொழுத்திருந்தது. கவலையற்றும் இருந்தது.

ஒருநாள் நரி ஆற்றின் மறுகரைக்குப் போயிற்று. அப்போது அதிக மழை பெய்தது. ஆற்றில் திடீரென்று பெருவெள்ளம் புரண்டது. என்ன செய்யும் நரி? அக்கரையிலேயே தங்கி

யிருந்தது. அங்கே அதற்குச் சிறிதும் உணவு கிடைக்கவில்லை. இரண்டு நாள் பட்டினியாகவே கிடந்தது. அதனல் நரி மிக வருத்தமடைந்தது. பலபல யோசனையோடு தனியே அமர்ந்திருந்தது.

அந்த வழியே ஒட்டகம் ஒன்று வந்தது. அதைப் பார்த்து நரி "ஓ அண்ணு, ஒட்டகமே, நீ எங்கே போகிருய்? நீ பசியாய் இருப்பதாகத் தெரிகிறதே" என்றது.

"ஆம், இரண்டு நாட்களாக விடாமழை பெய்ததால் தீனி கிடைக்கவில்லை" என்றது ஒட்டகம்.

"அப்படியா! பாவம்! நீ என் சொல்படி செய்தால் நல்ல உணவு வேண்டிய மட்டும் பெறுவாய்" என்றது நரி.

"தயவு செய்து சொல்; அப்படியே செய்கிறேன்" என்று வேண்டிற்று ஒட்டகம்.

"அண்ணு, இந்த ஆற்றின் அக்கரையில் கரும்புத் தோட்டம் செழித்து இருக்கிறது" என்றது நரி.

கரும்பு என்ற சொல்லைக் கேட்டவுடனே ஒட்டகத்திற்கு வாயில் நீர் சுரந்தது. "தம்பி, நான் போய் வருகிறேன்" என்றது ஒட்டகம்.

"அவசரப்படாதே இடம் தெரியாமல் நீ அக்கரைக்குப் போனல் என்ன பயன்?" என்றது நரி.

"ஆனல் தம்பி, என்மேல் கருணைகொண்டு என்னுடன் வா. நான் என் முதுகின்மேல் உன்னை ஏற்றிச் செல்கிறேன். சீக்கிரம் புறப்படு" என்று பணிவுடன் வேண்டியது ஒட்டகம்.

நரி மனமகிழ்வோடு ஒட்டகத்தின்மேல் ஏறிக்கொண்டது. ஒட்டகம் நதியைக் கடந்து அக்கரை யடைந்தது. நரி ஒட்டகத்திற்குக் கருப்பந் தோட்டத்தைக் காட்டியது. ஒட்டகம் அத்தோட்டத்தில் நுழைந்து தன் வயிருறத் தின்றது.

அதைக் கண்ட நரிக்குத் தன் இயல்பாகிய கெட்ட எண்ணம் உண்டாயிற்று. ஒட்டகத்திற்குத் தீமையுண்டாக்கக் கருதியது. அதற்காகப் பகலிலேயே சுற்றிச் சுற்றியோடிக் கத்தத் தொடங்கியது.

நரியின் குரலைப் பக்கத்து ஊரிலுள்ள மனிதர் கேட்டனர். கையில் தடிகொண்டு திரண்டு வந்தனர்.

வந்தவர்கள், ஒட்டகம் கருப்பஞ் சோலையை அழிப்பதைக் கண்டார்கள். கோபங்கொண்டு ஒட்டகத்தை நையப் புடைத்தார்கள். அடிபட்ட,

ஒட்டகம் அப்போதே ஓடி மறு கரையை யடைந்தது.

"வஞ்ச நெஞ்சக்காரர் சொல் கேட்க வேண்டாம்."

---

9. சோம்பலுள்ள வண்டிக்காரன்

[நாடகம்]

இடம் :—பாதை

காலம் :—இரவு

உறுப்பினர் :—வண்டிக்காரன், கடவுள்

வண்டிக்காரன் :—ஓ! கடவுளே, ஓ! கடவுளே, [அழுகிறான்]

தெய்வமே, இரவில், இருளில், துணையில்லாமல் வருந்துகிறேனே! அருள் புரியக் கூடாதா? [அழுகிறான்]

கடவுள் :—யாரப்பா நீ?

வண் :—சுவாமி, நான் வண்டிக்காரன்.

கட :—நீ ஏன் தனியே வந்தாய்?

வண் :—ஆண்டவனே நான் தனியே வரவில்லை. பல வண்டிகளுடனே வந்தேன். அவர்கள் தம் வண்டிகளை முன்னே ஓட்டிக் கொண்டு போய்விட்டார்கள்.

கட :—ஓ! நீ ஒரு சோம்பேறி, வண்டியில் படுத்துத் தூங்கிவிட்டிருப்பாய். அதனுல் அவர்கள் முன்னே ஓட்டிச் சென்ருர்கள். சரி, இப்போது நீ ஏன் என்னை அழைத்தாய்?

வண் :—சுவாமி, என் குதிரைகள் வழியைவிட்டு ஒதுங்கிச் சென்றதால் வண்டியின் சக்கரம் பாதையை விட்டுக் கீழே இறங்கிவிட்டது. இறங்கிய சக்கரம் சேற்றில் புதைந்து விட்டது. ஆதலால், குதிரைகள் இழுக்க முடியாமல் வருந்துகின்றன. கருணை கூர்ந்து இந்தச் சக்கரம் மண்ணிலிருந்து கிளம்பும்படி செய்யுங்கள்.

கட :—[சிரிக்கிருர்] அடே. சோம்பேறி, மனிதனுல் ஆகாத வேலைக்கல்லவா கடவுளின் கருணையை வேண்ட வேண்டும். இந்தச் சிறு காரியத்துக்குமா நீ என்னை எதிர் பார்க்கிருய்?

வண் :—ஆண்டவனே, தாங்கள் அப்படிச் சொல்லிவிடக் கூடாது. கருணை செய்ய வேண்டும்.

கட :—சக்கரம் பாதையை விட்டிறங்கி, மண்ணில் புதைந்துவிட்ட பிறகும் நீ வண்டியில் இருந்தபடியே என்னை வேண்டுகிருய்.

இந்த முறை நான் உனக்கு உதவினுல், பின்பு, நீ வண்டி ஓட்டுவதற்கும் என்னை ஏவுவாய். இப்படிப்பட்ட சோம்பேறிகளுக்கு நான் ஒருபோதும் இரங்கமாட்டேன்.

வண் :—ஐயனே, தாங்களே என்னைக் கைவிட்டால் வேறு யார் எனக்கு உதவுவார்கள். நான் தங்களையே முழுதும் நம்பியிருக்கிறேன்.

கட :—ஐயோ, நீ உன் உடலைச் சோம்பலுக்கு இடமாக்கிவிட்டாய். ஆதலால், அறிவும் தெளிவில்லாமல் கிடக்கின்றது. போகட்டும்; உன்னை நல்வழிப் படுத்தி விடுகிறேன். கீழே இறங்கு.

வண் :—நான் இறங்கினுல் கால் சேருகிவிடுமே.

கட :—ஆ! என்ன மூடபுத்தி! சேருனுலும் பழுதில்லை இறங்கு.

வண் :—சுவாமி, நான் இறங்கிவிட்டால் வண்டியை ஓட்டுகிறவர் யார்?

கட :—பின்பு நீயே ஓட்டலாம்; இறங்குவதற்குச் சோம்பற்பட்டு இப்படி எல்லாம் சொன்னுல் நான் போய்விடுவேன்.

வண் :—இல்லை; இல்லை. இதோ இறங்கி வருகிறேன். [இறங்கிவருகிருன்]

கட:–குதிரைகளின் கடிவாளக் கயிற்றை இடது கையில் பிடி; உனது வலது தோளால் சக்கரத்தைத் தாங்கி உன் பலம் கொண்ட மட்டில் தூக்கு.

வண்:—அப்படியே சுவாமி! [செய்கிறான். சக்கரம் மேலெழும்பிற்று குதிரைகள் எளிதில் வண்டியை இழுத்தன.]

கட:—இனி, நீ வண்டியை ஓட்டிச் செல்.

[மறைகிறார்]

வண்:—சுவாமி, [திரும்பிப்பார்க்கிறான்] ஐயோ, ஆண்டவனைக் காணேனே ஆ! மறைந்துவிட்டாரே, அவர் கருணையே கருணை. முழுச் சோம்பேறியாய்க் கிடந்த என்னை ஊக்கிவிட்டார். அவரை நான் என்றும் மறவாமல் வாழ்த்துவேன்.

[வண்டியை ஓட்டிச் செல்கிறான்]

---

10. முடிமறைத்தாலும் முட்டாள் வெளியாவான்

ஒரு காட்டில் கழுதை ஒன்று இருந்தது. அது ஒருநாள் வெளியே உலாவப் போயிற்று. போன இடத்தில் ஒரு சிங்கத்தின் தோலைப்பார்த்தது. அதை எடுத்துத் தன்மீது போர்த்துக் கொண்டது.

பின்பு, அது நீர் குடிக்க ஒரு சுனைக்குச் சென்றது. நீர் அருந்தும்போது தன் நிழலை நீரில் கண்டது. கழுதைக்கு அப்போது உண்டான வியப்புக்கு எல்லையில்லை, " ஆ! நான் ஒரு சிங்கமாகிவிட்டேன். யாரும் என்னைக் கழுதை என்றே சொல்லமாட்டார்கள்; நினைக்கவும் மாட்டார்கள்; ஆம் சிறிதும் ஐய மில்லை. நான் சிங்கமே; விலங்கரசனே," என்று குதித்தது. அதுமுதல் அது சிங்கத்தைப் போலவே தலை நிமிர்ந்து, கம்பீரமாக நடக்கத் தொடங்கியது. அன்றியும் உண்மையான சிங்கம் போலவே நடித்து வந்தது.

ஆகையால், மற்ற எல்லா விலங்குகளும் அதைக்கண்டு அஞ்சின. அதுமுதல் அந்தக் கழுதை காட்டு விலங்குகளுக்கு அரசனாகிவிட்டது. மிகவும் செல்வாக்குடன் காலங் கழித்தது.

ஆனால், அக்கழுதையின் அதிகாரம் ஒரு நரியினிடம் செல்லவில்லை. அந்த நரி கழுதை யைக்கண்டு அஞ்சுவதே இல்லை. ஆகையால், கழுதை ஒருநாள் நரியைத் தனியே அழைத்தது. ஏ நரியே, இந்தக் காட்டில் உள்ள எல்லா விலங்குகளும் எனக்கு அடங்கி நடக்கின்றன. நீ மாத்திரம் எனக்கு அஞ்சுவதேயில்லையே! என்ன காரணம் என்று கேட்டது.

அதைக் கேட்ட நரி "ஐயா, கழுதையாரே, நீர் சிங்கத்தின் தோலைப் போர்த்திருப்பதை நான் அறிந்து கொண்டேன்" என்றது. கழுதை திடுக்கிட்டது. ஆனாலும் அதை வெளிக்குக் காட்டாமல் "நீ எப்படி யறிந்தாய்?" என்றது.

உடனே நரி குலுங்கக் குலுங்க நகைத்து "மூடி மறைத்தாலும் முட்டாள், தானே வெளியாவான்" அல்லவா! உமது காதுகளும், உமது குரலும் நீர் கழுதை என்பதை எனக்கு அறிவித்தன என்றது.

என்ன செய்யும் கழுதை? வெட்கப்பட்டு ஓடிவிட்டது.

2208